

திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் சட்டமன்றத் தொகுதி, தாராபுரம் கிழக்கு ஒன்றியம் மற்றும் கொளத்துப் பாளையம் பேரூர் கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், வாக்குச்சாவடி குழு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் திருப்பூர் கிழக்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் கழக மகளிர் அணி துணைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், ஒன்றிய கழக செயலாளர் கே.கே.துரைசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். இதில் மாவட்ட துணை செயலாளர் பிரபாவதி பெரியசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தன்சேகர் உள்பட மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், வாக்குச்சாவடி குழு நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



கர்மவீரர் காமராஜர் அவர்களின் 124வது பிறந்த நாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் மாவட்டக் கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சு.முத்துசாமி பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்வில் வி.சி.சந்திரகுமார், துணை மேயர் வி.செல்வராஜ், வீரமணி, ஆ.செந்தில்குமார், ப.க.பழனிசாமி, டி.எஸ்.குமாரசாமி, வி.சி.நடராஜன், குறிஞ்சி என்.தண்டபாணி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### குளித்தலை அருகே பணிக்கம்பட்டியில் முன்னாள் எம்.எல்.ஏ.

# கந்தசாமி பிறந்த நாள் விழா - திருவுருவச் சிலை!

## முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார்!

கரூர், ஜூலை 17 -

கரூர் மாவட்டம் குளித்தலையில் 1967 71, 1971 76 ஆகிய காலகட்டத்தில் தி.மு.க. எம்.எல்.ஏ.வாக இருந்தவர் கந்தசாமி. இவரது மனைவி நல்லம்மாள்.

இவர் தான் எம்.எல்.ஏ.வாக இருந்த காலகட்டத்தில், குளித்தலை முசிறி இடையே காவிரி பாலம் அமைக்க வேண்டும் என அப்போது முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களிடம் கோரிக்கை வைத்து நதியின் குறுக்கே சுமார் 1.75 கிலோமீட்டர் தூரம் வரை மிகப் பெரிய பாலம் அமைக்க காரணமாக இருந்துள்ளார்.

தான் எம்.எல்.ஏ ஆக பணியாற்றிய காலத்தில் குளித்தலை தொகுதிக்கு என பல்வேறு நலத்திட்டங்களை கொண்டு வந்துள்ளார்.

மேலும் நிலவள வங்கியின் மாநில தலைவராகவும் இவர் பணியாற்றியுள்ளார்.

இவர் கடந்த ஒரு ஆண்டுக்கு முன்பு வயது மூப்பு காரணமாகவும், உடல் நலகுறைவு காரணமாகவும் இயற்கை எய்தினார்.

அதன் பின்னர் அவரது துணைவியாரும் உடல் நலக் குறைவு காரணமாக இயற்கை எய்தினார்.

முன்னாள் எம்.எல்.ஏ. கந்தசாமியின் 94வது பிறந்த நாளை முன்னிட்டு குளித்தலை அருகே சொந்த ஊரான மேல பணிக்கம் பட்டியில் உள்ள அவரது இல்லத்தில் கந்தசாமி மற்றும் அவரது மனைவி நல்லம்மாள் திருஉருவச் சிலைகள் திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. மூத்த வக்கீல் பாலன் அனைவரையும் வரவேற்றார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும், கழக முதன்மைச் செயலாளருமான கே.என்.நேரு கலந்து கொண்டு திருவுருவச் சிலையை திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.

இதில் முன்னாள் அமைச்சர் நல்லுசாமி, குளித்தலை எம்.எல்.ஏ. சூரியனூர் சந்திரன், திருச்சி மேயர் அன்பழகன், முன்னாள் எம்.எல்.ஏ. ராமர், தி.மு.க. மாவட்ட அவைத் தலைவர் ராஜேந்திரன், குளித்தலை மேற்கு ஒன்றிய செயலாளர் தியாக ராஜன், பத்மஸ்ரீ ஸ்கோப் சுப்புராமன், சேவை கோவிந்தராஜ், கிராமியம் நாராயணன் மற்றும் டாக்டர்கள் வக்கீல்கள் தி.மு.க. நிர்வாகிகள் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் முடிவில் முன்னாள் எம்.எல்.ஏ. கந்தசாமி மகன் மோகன் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

# சீரழியும் சிறைத்துறை... கண்டுகொள்ளாத அமைச்சர் நிர்மல்குமார்!

## தி.மு.க. இளைஞர் அணி குற்றச்சாட்டு!

சென்னை,ஜூலை.17 -

தி.மு.க. இளைஞர் அணி ட்விட்டர் பதிவு வருமாறு:

நாகர்கோவில் கிளைச்சிறையில் விசாரணைக் கைதியாக அடைக்கப்பட்டிருந்த மாற்றுத்திறனாளியான சபரிவர்மன் மரணமடைந்திருக்கிறார். நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு, கிளைச்சிறையில் அடைக்கப்பட்டவர் அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறார் என குடும்பத்தினர் குற்றம்சாட்டுகின்றனர்.

உடல் முழுவதும் 19 இடங்களில் காயங்கள் இருப்பதாக உடற்கூராய்வில் தெரிய வந்திருக்கிறது. மாற்றுத்திறனாளி என்றும் பாராமல், அவருக்கு பாதிப்பு இருக்கக்கூடிய வலது கையை கண்மூடித்தனமாக தாக்கி உடைத்திருக்கிறார்கள் என்று உறவினர்கள் கூறுகின்றனர். தலை முதல் கால் வரை அவருடைய உடலில் காயங்களும், ரத்தக்கட்டுக்களும் இருந்திருக்கின்றன.

அந்த கொடூரம் அடங்குவதற்குள், சென்னை மத்திய சிறையில் பாலாஜி என்பவர் மர்மமான முறையில் உயிரிழந்திருக்கிறார். தாம்பரம் சேலையூரைச் சேர்ந்த இவர், கைது செய்யப்பட்டபோது நல்ல ஆரோக்கியத்துடன் இருந்துள்ளார். ஆனால் திடீரென அவருடைய இறப்பு நிகழ்ந்திருக்கிறது. இன்னொரு பக்கம் சில நாட்களுக்கு முன்பு செங்கல்பட்டில் உள்ள அரசு சிறுவர் பாதுகாப்பு இல்லத்தில் இருந்து 12 பேர் பூட்டை உடைத்துக்கொண்டு தப்பியோடி உள்ளனர். வழியில் கண்ணில் பட்ட பொதுமக்களை எல்லாம் தாக்கி, செல்போன், இருசக்கர வாகனங்களை பறித்துக் கொண்டு ஓடிவிட்டனர்.

ஒரே வாரத்தில் சிறைத்துறையில் இத்தனை அசம்பாவிதங்கள் நடந்திருக்கின்றன. சம்பந்தம் இல்லாத துறைகள் குறித்தெல்லாம் சம்பந்தம் இல்லாத கருத்துகளையும், அரசியல் நாகரிகம்

இல்லாமல் வரைமுறையற்ற பேச்சுக்களை பேசுவதையும் வாடிக்கையாக வைத்துள்ள, சிறைத்துறைக்கு பொறுப்பு வகிக்கும் அமைச்சர் சி.டி.நிர்மல்குமார் இந்த பிரச்னைகள் குறித்தெல்லாம் இன்னும் வாயையே திறக்கவில்லை.

மின்வெட்டு பிரச்னையை சரிசெய்ய முடியாமல் திணறுவதைப் போலவே, சிறைத்துறை சீரழிவதையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார். குற்றவாளிகளை சீர்படுத்த வேண்டிய சிறைத்துறையை எப்படி சீர்படுத்துவது குறித்து சிந்தியுங்கள் அமைச்சரே!

#நீதி_வேண்டும்# CustodialDeath #LockUp Death

# சேலத்தில் மாநகராட்சி பெண் மாமன்ற உறுப்பினரைத் தாக்கிய போலீஸ் அதிகாரி!

சேலம், ஜூலை 17-

சேலம் மாநகரம் 10 வது கோட்டத்தில் உள்ள பொன்னமாபேட்டையில் ஏ. டி. எஸ். பியாக பணியாற்றி ஓய்வு பெற்ற போலீஸ் அதிகாரி காந்தி இவர் அருகில் உள்ள இவரது தோட்டத்தில் உள்ள குப்பைகளை அகற்றி தீ வைத்து எரித்துள்ளார்.

இதனால் அந்த பகுதியில் புகை அதிக அளவில் வெளியேறி மக்கள் சுவாசிக்க முடியாமல் திணறினார்கள்.

இதை அந்த 10 வது கோட்ட மாமன்ற உறுப்பினரிடம் மக்கள் புகார் செய்தனர்.

உடனே மாமன்ற உறுப்பினர் நேரில் சென்று விசாரித்தார். அப்போது காந்தி வேகமாக ஓடி வந்து சாந்தியிடம் தகாத வார்த்தையில் பேசி அவருடைய கையை பிடித்து அடித்து கீழே தள்ளி விட்டார் அதோடு செங்கல்லாலும் தாக்கியதில் காயம் அடைந்தார்.

இந்த நிலையில் காந்தி மாமன்றர் உறுப்பினர் சாந்தி என்னை காயப்படுத்தியதாக கூறி தனியார் மருத்துவ மனையில் சிகிச்சைக்கு சேர்ந்துள்ளார்.

இந்த சம்பவம் குறித்து மாமன்ற உறுப்பினர். சாந்தியும் காந்தியும் அம்மா பேட்டை காவல் நிலையத்தில் புகார் செய்துள்ளனர். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.



திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. கழக அலுவலகத்தில், தெற்கு மாவட்ட கழகச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் தெற்கு மாவட்ட மாணவரணி ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாநில மாணவரணி செயலாளர் வீரமணி ஜெயக்குமார் மற்றும் மாநில மாணவரணி துணைச் செயலாளர் சோலைராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மாவட்ட அமைப்பாளர் முத்து வெங்கடேஷ், மாநகர அமைப்பாளர் முகம்மது அசாருதீன், மாவட்ட மற்றும் மாநகர துணை அமைப்பாளர்களான ராதாகிருஷ்ணன், கீதா, மணிகண்டன், சிபிராஜ், சந்திரசேகர், ஹரிஹரசுப்பிரமணி, கண்ணன், சாமிக்கண்ணு, ஸ்ரீநிதி சதீஷ்குமார் உள்ளிட்டோர், மாவட்ட மாநகர ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் மாணவரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனையில் பங்கேற்றனர். கூட்டத்தின் நிறைவில் மாநகர கழகச் செயலாளர் மு.மதிவாணன் நன்றி தெரிவித்தார்.

### கழகத்திற்கு எதிராக பரப்பப்படும் பொய் செய்திகளுக்கு - சமூக வலைதளங்களில்

# இளைஞர் அணி, மாணவர் அணி, தகவல் தொழில்நுட்ப அணிகளை ஒருங்கிணைத்து பதிலடி கொடுப்போம்!

## துரை.செந்தமிழ் செல்வன் தலைமையில் நடைபெற்ற மாவட்டக் கழக கூட்டத்தில் தீர்மானம்!

கோவை, ஜூலை 17 –

கோவை மாநகர் மாவட்ட இளைஞர் அணி மாணவர் அணி தகவல் தொழில்நுட்ப அணிகளை ஒருங்கிணைத்து கழகத்திற்கு எதிராக பரப்பப்படும் பொய் செய்திகளுக்கு சமூக வலைதளங்களில் பதிலடி கொடுக்க ஊக்குவிக்க மாநகர் மாவட்ட கழகப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு ள்ளது.





கோவை மாநகர் மாவட்டக் கழக நிர்வாகி கள், பகுதி கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் வடகோவையில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த கோவை மாவட்டக் கழக அலுவலகத்தில் கோவை மாநகர் மாவட்ட கழகப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக துணை செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், மாவட்ட பொருளாளர் எஸ்.எம்.முருகன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வே.பால சுப்பிரமணியன், ஆனந்த்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் வெ.நா.உதயகுமார், ச.கார்த்தி கேயன், இரா.மணிகண்டன், வடவள்ளி குப்பு சாமி, ஆடிட்டர் சசிகுமார், நொய்யல் செல்வம், சரஸ்வதி புஷ்பராஜ், மு.மா.ச. முருகன் மற்றும் பகுதி கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், கழக சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர், நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கோவை மாநகர் மாவட்ட கழகத்திற்குட்பட்ட 54 வட்ட கழகங்களிலும் செயல்வீரர்கள் கூட்டங்களை மிக எழுச்சி யோடு நடத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த செயல்வீரர் கூட்டங்களை அந்தந்த பகுதி கழகங்களுக்குட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக, வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக உறுப்பினர்கள், GenZ இளைஞர்கள், இளம் பெண்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து நடத்திட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் வரவிருக்கின்ற இடைத்தேர்தல், உள்ளாட்சி தேர்தல் ஆகியவற்றை கருத்தில் கொண்டு தொடர்ந்து பொய் வழக்குகள் போட்டு முன்னாள் அமைச்சர், கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில்பாலாஜி மற்றும் சமூக ஊடக செயற்பாட்டாளர்களை கைது செய்வது போன்ற செயல்களில் ஈடுபடும் இந்த குதிரை பேரம், சோபா மாடல் அரசாங்கத்திற்கு இந்த கூட்டத்தின் வாயிலாக கண்டனங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த அடக்குமுறை செயல்களை கண்டித்தும் மக்களிடம் உண்மைகளை எடுத்துக்கூறவும் வருகின்ற காலத்தில் அதிகப்படியான தெருமுனை பிரச்சாரம் கூட்டங்களை நடத்துவது என தீர்மானிக்கப்படுகிறது.

இளைஞர் அணி, மாணவர் அணி, தகவல் தொழில்நுட்ப அணிகளை ஒருங்கிணைத்து கழகத்திற்கு எதி ராக பரப்பப்படும் பொய் செய்திகளுக்கு சமூக வலைதளங்களில் பதிலடி கொடுக்க ஊக்குவிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

# கோவை - கருமத்தம்பட்டியில் பரபரப்பு!

## பள்ளி மாணவிக்கு நள்ளிரவில் தொடர் பாலியல் தொல்லை!

கோவை, ஜூலை 17 -

கோவை மாவட்டம், கருமத்தம்பட்டி அருகே 9ம் வகுப்பு படிக்கும் பள்ளி மாணவிக்கு 3 நாளாக தொடர்ந்து, நள்ளிரவில் பாலியல் தொல்லை அளித்ததாக அவரது சித்தப்பாவை போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கோவை மாவட்டம், கருமத்தம்பட்டி அருகே உள்ள ஒரு பஞ்சாலையில் வசித்து வருபவர் 35 வயது இளம்பெண். இவருக்கு திருமணம் ஆகி 3 பெண் குழந்தைகள் உள்ளனர். இந்நிலையில் கடந்த 10 ஆண்டுக்கு முன்பு தம்பதிக்கு இடையே குடும்ப பிரச்சினை காரணமாக மனைவி மற்றும் குழந்தைகளை தனியாக விட்டு விட்டு கணவர் சென்று விட்டார்.

அதன் பின்னர் அவர் அதே பஞ்சாலையில் வேலை செய்து வரும் கருமத்தம்பட்டியை சேர்ந்த தொழிலாளி உத்தமன் (32) என்பவரை திருமணம் செய்து கொண்டு குடும்பம் நடத்தி வந்தார்.

உத்தமன் மற்றும் இளம் பெண் அவரது மகள்கள் 3 பேர் ஆகியோர் கடந்த 10 ஆண்டுகளாக ஒன்றாக வசித்துவந்தனர். இவர்கள் அனைவரும் தற்போது அந்த பகுதியில் உள்ள பஞ்சாலையில் இருக்கும் தொழிலாளர்கள் தங்கும் விடுதியில் தங்கி இருந்து கொண்டு அதே பஞ்சு மில்லில் வேலைக்கு சென்று வருகின்றனர். மகள்கள் மூன்று பேரும் அதே ஊரில் உள்ள அரசு பள்ளியில் படித்து வருகின்றனர்.

இந்நிலையில் 9 ம் வகுப்பு படிக்கும் 2வது மகளுக்கு சித்தப்பா முறையாகும் உத்தமன் கடந்த 3 நாட்களாக தொடர்ந்து இரவு நேரங்களில் பாலியல் தொல்லை கொடுத்து வந்துள்ளார். இது தொடர்பாக உத்தமனிடம் ஏன் இதுபோல நடந்து கொள்கிறீர்கள் என சிறுமி கேட்டபோது பதில் சொல்லாமல் தொடர்ந்து சில்மிஷத்தில் ஈடுபட்டுள்ளார்.

இதனால் என்ன செய்வது என அறியாமல் திகைத்த அந்த சிறுமி மாவட்ட காவல்துறை கட்டுப்பாட்டு அறை அவசர உதவி எண்ணுக்கு போன் செய்து நடந்த சம்பவங்களை கண்ணீருடன் கூறிகதறியுள்ளார். இதையடுத்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பவன்குமார் உத்தரவின் பேரில் கருமத்தம்பட்டி அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் ரமாதேவி மற்றும் போலீசார் சம்பந்தப்பட்ட சிறுமியிடம் விசாரணை நடத்தினர்.

அப்போது, சிறுமி நடந்த சம்பவங்களை போலீசாரிடம் தெரிவித்துள்ளார். இதைத்தொடர்ந்து அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார், அந்த பஞ்சாலைக்கு சென்று சிறுமிக்கு பாலியல் தொல்லை அளித்த உத்தமனை காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தனர். தொடர்ந்து, அவர் மீது போக்சோ சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து போலீசார் கைது செய்தனர். பின்னர் உத்தமனை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி போலீசார் சிறையில் அடைத்தனர். இச்சம்பவம் அப்பகுதியினரிடம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

### மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணியால்

# மாணவர்களின் கல்வித் தரம் பாதிக்கும்!

## பட்டதாரி ஆசிரியர்கள் குற்றச்சாட்டு!

கோவை, ஜூலை 17 –

கோவை மாவட்டத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027 பணிகள் நடக்க உள்ளது. இதில், முதற்கட்டமாக நேற்று முதல் வரும் 31ம் தேதி வரை சுய கணக்கெடுப்பு நடக்கிறது. அதன்படி பொதுமக்கள் நேற்று முதல் வரும் 31ம் தேதி வரை se.census.gov.in s.gov.in என்ற இணையதளத்தின் வாயிலாக தங்களது குடும்ப விவரங்களை தாங்களாகவே பதிவு செய்ய வேண்டும். மேலும், வரும் ஆகஸ்ட் 1ம் தேதி முதல் 30ம் தேதி வரை கணக்கெடுப்பாளர்கள் மற்றும் மேற்பார்வைளர்கள் மூலம் வீடுகள் தோறும் வீடுகள் பட்டியலிடல் மற்றும் வீட்டு கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கிறது.

இந்த கணக்கெடுப்பு பணியில் அரசு பள்ளியின் ஆசிரியர்கள் அதிகளவில் ஈடுபட உள்ளனர். ஒரு நபருக்கு 200 வீடுகள் என ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த கணக்கெடுப்பு தொடர்பான பயிற்சிகளும் அவர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. இவர்கள், வரும் ஆகஸ்ட் 1ம் தேதி முதல் தங்களின் கணக்கெடுப்பு பணியில் ஈடுபட உள்ளனர். மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027க்கான விண்ணப்ப படிவங்களில் கட்டடம் மற்றும் வீட்டின் விவரங்கள், குடும்ப விவரங்கள், தண்ணீர், குடும்ப சொத்துகள் மற்றும் டிஜிட்டல் வசதிகள், மின்சாரம், கழிப்பறைகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்தும், பொதுமக்களின் சுய விவரங்கள் குறித்த 34 கேள்விகள் இடம் பெற்றுள்ளது.

இந்த தகவலை ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் சேகரிக்க உள்ளனர். இந்த கணக்கெடுப்பு பணியில் தொடக்க, நடுநிலைப்பள்ளி ஆசியர்கள் அனைவரும் ஈடுபடுத்தப்பட்டு இருப்பதாகவும், மேல்நிலைப்பள்ளிகளை சேர்ந்த பட்டதாரி ஆசிரியர்கள், முதுநிலை பட்டதாரி ஆசிரி யர்கள் பலர் பணியமர்த்தப்பட்டு இருப்பதாகவும், இதன் காரணமாக மாணவர்களின் கல்வி பணி கடுமையாக பாதிக்கப்படும் எனவும் ஆசிரியர்கள் தரப்பில் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து பட்டதாரி, முதுநிலை ஆசிரியர்கள் கூறியதாவது : 10ம் வகுப்பு. பிளஸ்2 மாணவர்களுக்கான குறிப்பிட்ட காலத்தில் பாடத்திட்டங்களை முடிக்க ஏற்கனவே போதிய நேரம் கிடைப்பதில்லை. மக்கள் கணக்கெடுப்பு பணியின் போது ஆசிரியர்கள் பள்ளி முடித்துவிட்டு மாலையில் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் சென்று பணியை மேற்கொள்ள அறிவுறுத்தி உள்ளனர். இப்படி பணி செய்யும் போது இரவு 9 மணி வரை நீடிக்க வாய்ப்பு இருக்கிறது.

இதனால், மறு நாள் மீண்டும் பள்ளிக்கு சென்று மாணவர்களுக்கு முறையாக கல்வி அளிப்பதில் சிக்கல் இருக்கிறது. இதன் காரணமாக பொதுத்தேர்வு எழுதும் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. தவிர, பெண் ஆசிரியர்கள் பணி முடிந்து இரவு வீடு செல்லும் நிலை இருப்பதால் அவர்கள் பல்வேறு சிக்கல்களை சந்திக்க வேண்டி இருக்கும்.

எனவே மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகளில் இருந்து 10,12 ம் வகுப்புகள் ஆசிரியர்களை விடுவிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர், முதன்மை கல்வி அலுவலர் மற்றும் கல்வித்துறை இயக்குனர் என அனைவரிடமும் முறையிட்டோம். ஆனால், மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி மாநில அளவிலான பணி என்பதால், பணியை எளிமையாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், பணி சார்ந்த குறைகள் விரைவில் தீர்க்கப்படும் எனவும் அதிகாரிகள் தரப்பில் தெரிவித்துள்ளனர்.

கேரளாவிலும் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி நடக்கிறது. அந்த அரசு கணக்கெடுப்பு பணியில் ஈடுபடும் நபர்கள் ஆன்டியூட்டியில் 10 நாள் விடுப்பு அல்லது 20 நாட்கள் அரைநாள் விடுப்பு எடுத்து பணியை முடிக்க கூறியுள்ளனர். இது போன்ற நடைமுறை ஆசிரியர்களையும் கணக்கெடுப்பில் ஈடுபடும் நபர்களையும் பெரிய அளவில் பாதிக்காது. தவிர, மாணவர்களின் கல்வியும் தொடர்பான எவ்வித பாதிக்காத வகையில் இருக்கும். ஆனால், தமிழக அரசு கணக்கெடுப்பு பணி தொடர்பான எவ்வித மான அறிவிப்புகளையும் வெளியிடாமல் உள்ளது.

ஆசிரியர்களை மட்டும் அனைத்து பணிகளிலும் இணைப்பதற்கு பதிலாக, இது போன்ற பணிக்கு மற்ற துறையை சேர்ந்தவர்களையும் ஈடுபடுத்த வேண்டும். ஆசிரியர்களின் பணி சுமையை குறைக்கவும், கல்வி பணி பாதிக்காத வகையிலும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் கூறினர்.